பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 06 வியாழக்கிழமை (22-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 261

# கோர்பச்சேவ்வுக்கு எதிரான சதிப் புரட்சி முறியடிப்பு!



## மீண்டும் அவரிடம் ஆட்சிப் பொறுப்பு

மாஸ்கோ, ஆகஸ்ட் 22

சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவுக்கு எதிராக கடும் போக்காளர்கள் நடத்திய சதிப்புரட்சி அறுபது மணி நேரத்தின் பின்னர் நேற்று முறியடிக்கப்பட்டது.

மீண்டும் சோவியத் ஆட்சிப் பொறுப்பை அவரே பொறுப் பேற்றுக் கொண்டார்.

கோர்பச்சேவின் கீழ் பதில் ஜனாதிபதியாகக் கடமை யாற்றிய கினாடி யனயேவ் தலைமையில் கடந்த திங்கள் அதிகாலை நடத்தப் பட்ட சதிப் புரட்சியை அடுத்து, ஜனாதிபதி பதவியிலிருந்து கோர்பச்சேவ் அகற்றப்பட்ட தாக அறிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் சோவியத் தில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டதும்—

நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கினாடி யன யேவ் தலைமையின் கீழான எண்மர் குழு ஒன்று பொறுப் பேற்றதும் தெரிந்ததே.

விடுமுறையைக் கழிப்பதற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புரட்சிக்கு ஆதரவு தர கே. ஜி. பி. மறுத்தது!

கோர்பச்சேவுக்கு எதிராக திடீர் புரட்சி செய்து ஆட்சியை அமைக்க முயன்ற எண்மர் குழுவுக்கு சோவியத் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பியின் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க மறுத்து விட்டதாகவும்—

அதுவே புரட்சியாளர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கே. ஜி. பியின் தலைவர் விளாடிமீர் பிரிச்சோல் தலைமையின் கீழ் இயங்கிய இருபதுக்கும் அதிகமான உயரதிகள் புரட்சிக் குழுவுக்கு ஆதரவாகச் செயற்பட மறுத்து விட்டனர் என்றும்—

புரட்சிக் குழுவினருக்கு எதிராக ரஷ்ய மாநில அதிபர் யெல்சின் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தாங்கள் ஆதரவளிப்பதாக அவர்கள் அறிவித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-த-5]

## புரட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி!

மாஸ்கோ, ஆக. 22

சோவியத் அதிபர் கோர்பச்சேவுக்கு எதிராக நடத்தப்பட்ட புரட்சியை ஆட்சேபித்து அந்நாட்டின் பல இடங்களிலும் பெரும் மக்கள் கிளர்ச்சி இடம்பெற்றது.

புரட்சி முறியடிக்கப்பட்ட செய்தி வெளியானதும் அவர்கள் ஒன்று கூடி கிளர்ச்சியைக் கைவிட்டு மகிழ்ச்சி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அதற்கு முன்னதாக—

மாஸ்கோவிலும், லெனின் கிராடிலும் சோவியத் படைகளுக்கு எதிராக மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

புரட்சியாளர்களின் உத்தரவை அடுத்து தலைநகர் மாஸ்கோவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சோவியத் டாங்கிகளை வழிமறித்த மக்கள், அவற்றுக்கு தீயிட்டனர்.

ரஷ்ய மாநிலக் குடியரசு ஜனாதிபதி பொரிஸ் யெல்சினின் ஆதரவாளர்களுக்கும் சோவியத் மத்திய அரசின் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த மோதல்களில் குறைந்தது பத்துப் பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் சிலர் சோவியத் டாங்கிகளில் நசியுண்டு உயிர் துறந்தனர்.

புரட்சியாளர்களுக்கு எதிராக பெரும் வேலைநிறுத்தம் நடத்துவது என உக்ரேயின்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கோர்பச்சேவ் விடுதலையானார்!

புரட்சிக் குழுவினால் கிரிமியா நகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சோவியத் அதிபர் மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்று நள்ளிரவு விடுவிக்கப்பட்டார் என்று ஜப்பானிய செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது.

கிரிமியா நகரில் கோர்பச்சேவ் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீட்டை பாதுகாப்புப் படையினர் மூன்று வளையங்களாகச் சுற்றி வளைத்துக் காவல் புரிந்து வந்தனர் என்றும்—

புரட்சி முறியடிக்கப்படுவதற்கு முன்னர் கோர்பச்சேவை விடுவிக்க எடுக்கப்பட்ட இரண்டு முயற்சிகள் பலனளிக்காமல் போயின என்றும்—

ரஷ்ய மாநிலக் குடியரசின் தலைவர் யெல்சின் தெரிவித்தார். [உ-த-5]

## யெல்சினுக்கு புகழாரம்

மாஸ்கோ, ஆக. 22

சோவியத் சதிப்புரட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியை நடத்திய ரஷ்ய மாநிலக் குடியரசின் அதிபர் பொரிஸ் யெல்சினை உலகத் தலைவர்கள் பலரும் பராட்டியுள்ளனர்.

''துணிச்சல் மிக்கவர்; ஜனநாயகத்துக்கும் சுதந்திரத்துக்குமாக தனித்து நின்று போராடியவர் யெல்சின்'' — என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் பாராட்டினர்.

தமக்கும், கோர்பச்சேவுக்கும் எதிரான கருத்து வேறுபாடுகளை மறந்து நீதிக்காகப் போராடியவர் யெல்சின் என்று தலைவர்கள் பலரும் கூறினர்.

இதேவேளை—

சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டதை உலக நாடுகள் பலவும் ஏகமனதாக வரவேற்றிருக்கின்றன. (உ-த-5)

## புஷ் - கோர்பி 20 நிமிடம் பேச்சு

மாஸ்கோ, ஆக. 22

கிரிமியா நகரில் விடுவிக்கப்பட்ட கோர்பச்சேவ் உடனடியாக அங்கிருந்தவாறே அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் சுமார் இருபது நிமிட நேரம் தொலைபேசியில் உரையாடினார்.

அதன் பின்னர் தமது பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்காக அவர் மாஸ்கோ நோக்கி விரைந்தார். [உ-த-5]

## போல்டிக் குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம்

மாஸ்கோ, ஆக. 22

சோவியத்தில் சதிப்புரட்சி மற்றும் அதற்கு எதிரான கிளர்ச்சி ஆகியவை ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது—

மறுபுறத்தில் சோவியத் போல்டிக் குடியரசுகளான லித்துவேனியா, எஸ்தோனியா, லத்வியா ஆகிய மாநிலங்கள் தங்களை சுதந்திர நாடுகளாகப் பிரகடனம் செய்தன (உ-த-5)

## அம்பாறையில் 5 படையினர் பலி!

கொழும்பு, ஆக. 22

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த ஐந்து படையினர் உயிரிழந்தனர். நான்கு படையினர் காயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு இத்தகவலை வெளியிட்டன. (உ)

## புரட்சியாளர்கள் தப்பி ஓட்டம்!

மாஸ்கோ, ஆக. 22

சோவியத் சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டதை அடுத்து எண்மர் கொண்ட புரட்சிக் குழுவின் உறுப்பினர்கள் பலரும் மாஸ்கோவை விட்டு தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரட்சிக்கு தலைமை வகித்த சோவியத் உதவி ஜனாதிபதி கினாடியனயேவ், கே. ஜி. பி. இரகசிய பொலீஸ் பிரிவுத் தலைவர் கிறியேச்சேர் மற்றும் உறுப்பினர்கள் கிர்ஜீஜியா குடியரசுக்கு விமானம் ஒன்றில் தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்படு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவுக்கான பாதை கைவிட இரா்ணுவம் முடிவு!

லண்டன், ஆக. 22

ஆனையிறவுக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடையில் உள்ள இராணுவ நிலைகளில் இருந்து படையினர் வாபஸ் பெறப்பட்டு வருவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதனையே பி.பி.ஸி. செவ்வாய் இரவு ஆனையிறவிலிருந்து படையினர் வாபஸான தாக அறிவித்தது என்று இப்போது தெரியவந்துள்ளது.

வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுக்கான விநியோகப் பாதையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எண்ணத்தை ஸ்ரீலங்கா இராணுவம் கைவிட்டுவிட்டது என்பதையே இது காட்டுவதாவும் அவை சுட்டிக்காட்டின.

இந்த விநியோகப் பாதையைக் கட்டுப்பாட்டில் வைத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### மாலைதீவு சிறையிலிருந்து

## புளொட் உறுப்பினர்கள் மேலும் 17 பேர் விடுவிப்பு!

லண்டன், ஆக. 22

மாலைதீவில் 1988 ஆம் ஆண்டு இடம்பெற்ற அதிரடிச் சதிப்புரட்சிச் சம்பவம் தொடர்பாக குற்றவாளிகளாகக் காணப்பட்டு, அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த புளொட் உறுப்பினர்களில் மேலும் 17 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்,

மீண்டும் மாலைதீவுக்குத் திரும்பக்கூடாது என்ற நிபந்தனையுடன் அவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று மாலைதீவு அரசு அறிவித்துள்ளது.

இந்தச் சதிப்புரட்சி தொடர்பாக குற்றவாளிகளாக்க் காணப்பட்ட புளொட் உறுப்பினர்கள் 88 பேரில் இன்னும் 18 பேர் மாலைதீவுச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

புனலைக்காய் ½ கிலோ ரூபா 25/- மட்டுமே. இணுவில், திருநெல்வேலி, யாழ். ஆஸ்பத்திரி வீதி அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-0379)

### தேவை

Sony ICF - SW 1 பொக்கற் றேடியோ உடன் தேவை. விலை விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விமலாஸ், நவீன சந்தை, சாவகச்சேரி. (17848)

பெண்கள், சிறுவர்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வினோபா றேட் சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [எழிலகத்தின் முன்பாக] (17658)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 25 வயது நிரம்பிய நோர்வேயில் டாக்டராக பணிபுரியும் மணமகனுக்கு குற்றமற்ற, படித்த, அழகான மணமகள் தேவை. நட்சத்திரம்: திருவாதிரை. ABCDE, 328, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (17856)

யாழ். இந்து, 30 வயது பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு பிரான்சில் அல்லது வேறு நாட்டில் உள்ள மணப்பெண் விரும்பத்தக்கது. நட்சத்திரம்: மகம். குற்றம் அற்றவர். தொடர்பு: ABCDE, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (17857)

32 வயது. இலங்கை வங்கி மணமகனுக்கு மணப்பெண் தேவை. உதயத்தில் செவ்வாய் நட்சத்திரம்: ரோகினி. ABCDE விவாகப் பொருத்துனர், ஆனைப்பந்தி. (17859)

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

### செவ்வாய் மாற்றம்

இன்று [22 - 8 - 91] செவ்வாய் மாற்றம் எல்லா இராசிகளின் பலன்கள் புதிய வெளியீடு! விலை 6/50. எங்கும் விற்பனையாகின்றது. தங்கம் ஸ்ரோர்ஸ், முத்திரைச் சந்தையடி, நல்லூர். நூலாசிரியர்: Prof: சத்தியதாஸன், சித்தன் கேணி. (17662)

---

1991-08-22 வியாழக்கிழமை
முற்பகல் 11-00 மணிக்கு
மகிழ்ச்சிகரமான ஆரம்பம்

## ★ மதுரா ★
## தையல் நிலையம்

66, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை முன்பாக)

ஆண், பெண், சிறுவர்கள், பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை சிறந்த முறையிலும், குறைந்த விலையிலும் தைத்துக் கொள்ளலாம். (17864)

---

## உத்தியோகத்தர் தேவை

**தென் இந்திய திருச்சபை - யாழ். ஆதீனம்**

எமது ஆதீனத்தால் நடத்தப்பட்டு வரும், வரணியில் அமைந்துள்ள கோழிப் பண்ணைக்கு உத்தியோகத்தர் (Project Officer) தேவை. இவ்வேலைக்கான விண்ணப்பங்களை தகுந்த ஆவணங்களுடன் 05-09-1991க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தகுதியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.
(4256)

---

யாழ். பல்கலைக்கழக வெளிநிலை
## பட்டப் படிப்பிற்கான பதிவு

மேற்படி பல்கலைக் கழகத்தில்
வர்த்தக முதற் தேர்வு (B. Com.),
கலை முதற் தேர்வு (B. A.)

பதிவு வகுப்புக்கள் தொடர்பான விவரங்களை பெற்றுக் கொள்ள உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு:-
கலை, வர்த்தகக் கல்லூரி,
பட்டப் படிப்புப் பிரிவு,
374, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

(சி-0404) — நிர்வாகி.

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
25-10 1913

உதிர்வு:
28 8-1989

அமரர்
## செல்லப்பா நடராசா (C. C)

ஈராண்டு சென்றதையா எமைப் பிரிந்த எம்தலைவா
பேராண்ட பெருந்தகையே நீங்கள் - எமக்களித்த
சீராண்ட சொல்வழியே நிற்கின்றோம் - தரணியிலே
வேராண்ட ஆலமர விழுதுகளாய் - வாழ்ந்திருப்போம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

32, சோமசுந்தரம் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [17866]

---

THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR
## Biotechnology

Graduates / Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. Monthly allowance of Rs 2,500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

**The closing date for applications will be on 30 09 - 1991.**

**Registrar.**
University of Jaffna.
[C-0365]

---

## COMPUTER
BASIC


புதிய பிரிவு ஆரம்பம்: 28 - 08 - 1991
10- 30 மணி

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/0296)

---

## வீர வணக்கம்



வீரஜனனம்: 25 — 11 — 1970

வீர மரணம்: 22 — 07 — 1991

## வீரவேங்கை அறிவொளி
**(ஸ்ரீபத்மநாதன் சத்தியசிலன் - சுண்டிக்குளி)**

கட்டைக்காட்டில் எதிரியுடன் வீரமுடன் போராடி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை அறிவொளிக்கு எமது வீர வணக்கம்.

பெற்றோர், உறவினர்கள்,
நண்பர்கள்.
(17872)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 09 — 1943

மறைவு: 22 — 08 — 1987

திருமதி
## சிவலோகேஸ்வரி சிவதாசன்

ஆண்டு நான்கு சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம் உள்ளத்தில் நிலைத்திருக்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

கணவன், மகள்,
உற்றார், உறவினர்கள்.

''பிரஷாந்தி'',
கோப்பாய் வீதி, உரும்பராய். (4252)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
6 - 12 - 1957

உதிர்வு:
28 - 5 - 1986

## இரத்தினம் உதயசூரியன்

அன்பகலாக் குல விளக்கு உதயசூரியனே! எங்கள் குடும்பத்தில் மூத்த செல்வமாய் தோன்றினாய் வாழ்க்கைக்கு உயிர்த் துணைவனாய், அன்புக்கு ஓர் அண்ணாவாய், தூண்டாமணி விளக்காய் சுடர் விட்ட உன் வாழ்வு மணக்கோலத்தில் பறிப்பதற்காக பாதகர்கள் மறைந்திருந்து ஷெல் ஏவினரே! உருவம்தான் மறைந்ததுவே உங்களை இழந்த வடு இன்னும் மறையவில்லை.

உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அன்புத் தாய், சகோதரர்கள்,
பெறாமக்கள், மாமன்மார்,
மைத்துனிமார், உற்றார், உறவினர்.

வேலணை மேற்கு, வேலணை - 8. (17855)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தட்டிப் பறிக்கும் விஷப் பரீட்சை

கப்பலில் வட பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகளை பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறைமுகத்துக்குப் படிப்படியாக மாற்ற அரசு திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே காங்கேசன் துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ள ஐநூறு தொன் உணவுப் பொருள்களை வந்து பொறுப்பேற்குமாறு யாழ். அரச அதிபருக்கு விடுக்கப்பட்டுள்ள உத்தரவு அரசின் திட்டத்தின் ஒரு விஷப் பரீட்சை என்பதில் சந்தேகம் இல்லை.

இராணுவ நடவடிக்கைகள் உள்ள பகுதி ஒன்றில் பொது மக்களுக்கான உணவுப் பொருள்களை வந்து கையேற்கும்படி நிர்ப்பந்திப்பதற்கு அரசுக்கு எந்தவித அதிகாரமும் இருக்க முடியாது. அவ்வாறு நிர்ப்பந்திப்பது மக்களுக்கு உணவு விநியோகிக்கும் கடமையிலிருந்து மறைமுகமாக நழுவிக்கொள்வதாகும்.

சர்வதேச சட்டங்களுக்கே இது முரணானதாகும்.

பொருள்களை இறக்கச் செல்லும் ஊழியர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் வழங்கும் உத்தரவாதத்தை எப்படி நம்ப முடியும்? என்பது மற்றொரு முக்கிய கேள்வி.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் வடபகுதிக்குத் தேவையான உணவுப் பொருள்கள் காங்கேசன் துறைமுகத்திலேயே இறக்கப்பட்டு வந்தன. பின்னர் இராணுவ நடவடிக்கை காரணமாக காங்கேசன் துறைமுகத்தில் பொருள்களை இறக்க முடியாத நிலை ஏற்பட்டது. அரசு பல இழுத்தடிப்புகளின் மத்தியில் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்க ஒருவாறு அனுமதித்தது.

தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் உள்ள வசதியீனங்களைச் சாட்டாக வைத்தோ என்னவோ மீண்டும் காங்கேசன் துறைமுகத்தில் பொருள்களை இறக்க அரசு முயற்சிப்பது கண்டிக்கப்படவேண்டியதாகும்.

வடக்கில் சிவில் நிர்வாகம் சரிவர நடப்பதாக தென் பகுதிக்கும் வெளி உலகுக்கும் காட்டிக்கொள்ளும் ஒரு தந்திரமாகவும் இது இருக்கும்.

தற்போது கப்பல் மூலம் வடக்கே வரும் பொருள்களையும் இல்லாமல் செய்வதே அரசின் திட்டத்தின் உள்நோக்கம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏற்கனவே தமிழ் மக்களின் நிவாரணத்தில் கைவைத்துள்ள அரசு தற்போது கப்பல் மூலம் வரும் உணவுப் பொருள்களிலும் கை வைக்கத் திட்டமிடுவது தமிழ் மக்களை முழு அளவில் பட்டினி போடும் நடவடிக்கையே அன்றி வேறில்லை.

தமிழ்ப் பகுதிகளுக்கு நூறு வீதமும் உணவுப் பொருள்களை கப்பலில் அனுப்புவதாக வெளியில் காட்டிக் கொண்டு உண்மையில் அனுப்புவதோ பத்து முதல் இருபத்தைந்து சதவீதம் தான். அதனையும் நிறுத்துவதே இராணுவப் பிராந்தியம் ஒன்றில் வைத்து உணவுப் பொருள்களை கையளிக்க எடுக்கப்படும் நடவடிக்கை.

ஒரு கையால் உணவைக் கொடுப்பது போல (வெளிநாடுகளுக்கு) காட்டிக் கொண்டு மறு கையால் தட்டிப் பறிப்பதற்கு இது சமனன்றோ!

## மீண்டும் உணவு முத்திரை பொருள்கள்

யாழ்ப்பாணம், ஆக. 22

நிறுத்தப்பட்டிருந்த உணவு முத்திரைகளுக்கான விநியோகம் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

அகதி முகாமில் உள்ளவர்களுக்கு உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்கப்படமாட்டா என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## ஆசிரியர் ஒன்றிய ஆய்வரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஆக. 22

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தினர் ''சர்வதேச அரங்கில் தமிழீழ விடுதலைப் போராட்டம்'' என்ற ஆய்வுக் கருத்தரங்கினை ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி ''சர்வதேச நிலைவரமும் தேசிய இனங்களின் பிரச்சினையும்'' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துவார்.

''தமிழீழ போராட்டமும் இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கையும்'' என்ற பொருளில் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மு. திருநாவுக்கரசும், ''தமிழீழ விடுதலைப் போராட்டமும் வெகுசனத் தொடர்பு சாதனங்களும்'' என்னும் பொருளில் உதயன் பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதனும் உரையாற்றுவர்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா உட்பட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் கருத்துரை வழங்குவார்கள். [அ]

## யாழமுதம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ்ப்பாணம், ப. நோ. கூ. சங்கத்தினால் ''யாழமுதம்'' என்னும் பெயரில் உழைப்போர் உணவகம் இன்று காலை 11-35 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது.

சங்கத்தின் தலைமையகத்துக்கு அருகில் இந்த உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சாரணாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 22

சாரணத் தலைவர்கள், குழுச்சாரணத் தலைவர்கள், உதவிச்சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணத் தலைவிகள், உதவிக்குருளைச் சாரணத் தலைவிகள் ஆகியோருக்கான கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் இன்று பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெறும் என சாரணா சங்கச்செயலாளர் அறிவித்துள்ளார். [உ]

## கையூம் கொழும்பில்!

கொழும்பு, ஆக. 22

மாலைதீவு ஜனாதிபதி மாமூன் கையூம் இன்று வியாழக்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்கிறார். (உ-எ)

## பால்டிக் நாடுகள் அங்கீகரிக்க கோரிக்கை

மாஸ்கோ, ஆக. 22

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனிநாடாக பிரகடனம் செய்துள்ள பால்டிக் குடியரசுகளை அங்கீகரிக்கும்படி ஜோர்ஜியா மாநிலக் குடியரசு அமெரிக்காவைக் கோரியுள்ளது.

## ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருந்தால் அதனால் ஏற்படக்கூடிய இழப்புகளையும்—

விநியோகப் பாதையில் படையினர் நிலை கொள்ளும் பட்சத்தில் அவர்கள் மீது புலிகள் அடிக்கடி நடத்தக்கூடிய தாக்குதல்களினால் விநியோகப் பாதை துண்டிக்கப்படும் என்பதையும்—

ஸ்ரீலங்கா இராணுவம் கணித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை—

ஆனையிறவுக்கு வடக்கே யாழ் குடாநாட்டை நோக்கி பெரிய அளவில் முன்னேறும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றே பெரும்பாலும் தென்படுவதாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது.

அத்தகைய நடவடிக்கை ஒன்றை எடுக்கும் போது ஏற்படக் கூடிய ஆட்பலப் பிரச்சினை, கூடுதலான துருப்புகள், தளபாடங்களை அனுப்புவதில் உள்ள பிரச்சினைகள் ஆகியவற்றை இராணுவம் உணர்ந்திருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (உ-5)

## புளொட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குற்றவாளிகளாகக் காணப்பட்ட பின்னர் மாலைதீவு அரசால் மன்னிப்பு அளிக்கப்பட்டு ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட புளொட் உறுப்பினர்கள், இலங்கை வந்து சேர்ந்ததும் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்படத் தொடங்கினார்கள் என்பது தெரிந்ததே. [உ-5]

## புரட்சிக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாநில மக்கள் முடிவு செய்தனர்.

புரட்சியாளர்களின் உத்தரவினால் சோவியத் யூனியன் படைகள் தமது மாநிலக் குடியரசுகள் மீது தாக்குதல் நடத்தும் நிலை ஏற்படலாம் என்றும்—

அதற்குத் தயாராக இருக்குமாறும் போல்டிவியன் மாநிலங்கள் தமது படைகளுக்கு அழைப்பு விடுத்திருந்தன. (உ-த-5)


நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

### இறைஞ்சார் என் செய்வாரே!

குகனைக் குமரனைக் குன்றுதோ றாடியை
கோமள வல்லிதன்
மகனை மயூரனை மாயோன் மருகனை
மன்றாடி மைந்தனை
பவனைப் பழனியைப் பைந்தமிழ்ப் புலவனை
பரிபூ ரணனாம்
இவனை நல்லூர்ப் பதியில் இறைஞ்சார்
என்செய் வாரே!

—முருகனடியான்.


# இலங்கைத் தமிழர்களை பதியும் திட்டம் பிசு பிசுப்பு

## 30 ஆயிரம் பேரே இதுவரை பதிவு

சென்னை, ஆக. 22

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டிருந்த போதும், அதற்கு தகுந்த பலன் கிடைக்கவில்லை என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் தங்கியுள்ள 1லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களில் 30 ஆயிரம் பேர் மாத்திரமே பொலீஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

பதிவு செய்யாதவர்களில் 2 ஆயிரத்து 500 பேரே இதுவரை பிடிபட்டுள்ளனர்.

ஏனையோருக்கெதிராக நடவடிக்கை எடுக்க, வீடு வீடாகச் சென்று சோதனை நடத்த போதியளவு பொலீஸார் இல்லையாம். [இ-த]

# கர்நாடகத்திலும் ஈழத்தவர் பெயர் பதிய வேண்டும்

கர்நாடக மாநிலத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களும் தம்மைப் பதிவு செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது பற்றி மாநில அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இத்தகவலை முதலமைச்சர் பங்காரப்பா செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

கர்நாடக மாநிலத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழரை அடையாளம் கண்டறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் கீழ் சிறப்புப் படை ஒன்று அமைக்கப்படும் என்றும் திரு. பங்காரப்பா சொன்னார்.

சிவராசன் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட போது ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்த மூன்று பொலீஸாருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்றும் திரு. பங்காரப்பா அறிவித்தார். [இ-எ]

# அரியாலை இளைஞனுக்கு தாயின் சிறுநீரகம்!

## திருச்சியில் மாற்று அவயவ சிகிச்சை

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தாய் ஒருவர் தன்னுடைய மகனுக்கே தனது சிறுநீரகத்தை தானம் செய்திருக்கிறார்.

திருச்சியில் உள்ள ''சிட்டி மெடிக்கல் சென்ரர்'' வைத்தியர்கள் இதற்கான அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறார்கள்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த முகுந்தன் [வயது 19] என்ற மாணவனுக்கு திடீரென நோய் ஏற்பட்டது. அவரது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அறிந்த அவரது பெற்றோர்கள் சிகிச்சைக்காக அவரை கொழும்பிலிருந்து திருச்சிக்கு கொண்டு சென்றனர்.

அங்கு வைத்து முகுந்தனுக்கு தனது சிறுநீரகத்தை கொடுக்க அவரது தாயாரான தெரேசா செல்லத்துரை சம்மதித்தார். இதனை அடுத்து தெரேசா செல்லத்துரைக்கு எல்லாவித பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தெரேசாவுக்கு வழக்கமாக எல்லோருக்கும் இருப்பது போல இல்லாமல் சிறுநீரகம் இரண்டு இரத்தக் குழாயுடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் அந்த சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சையை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டபோதிலும் டாக்டர்கள் முயற்சி செய்து இறுதியில் அதில் வெற்றியடைந்தனர்.

மருத்துவ உலகில் இது ஒரு சாதனையாகக் கருதப்படுகிறது. [இ-5]

## கோர்பச்சேவ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காக கிரிமியா நகருக்குச் சென்றிருந்த கோர்பச்சேவ் அங்கு சிறைவைக்கப்பட்டார். சோவியத் பிரதமர் உட்பட பல உயரதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆனால்—

சதிப் புரட்சியாளர்கள் எதிர்பார்த்த ஆதரவு மக்களிடமிருந்தோ, உளவு ஸ்தாபனமான கே. ஜீ. பியிடமிருந்தோ, இராணுவத்திடமிருந்தோ கிடைக்காமல் போனதை அடுத்து சதிப் புரட்சி நேற்றிரவு—60 மணி நேரத்தின் பின்னர்—தோல்வியில் முடிவடைந்தது.

சதிப் புரட்சிக்கு எதிராக சோவியத்தின் மிகப் பெரிய மாநிலமான ரஷ்ய குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் தலைமையில் பெரும் மக்கள் கிளர்ச்சி இடம் பெற்றது.

சதிப்புரட்சி நேற்றிரவு முறியடிக்கப்பட்டதையடுத்து புரட்சியாளர்களினால் பிறப்பிக்கப்பட்டிருந்த அவசரகாலச் சட்டம் மற்றும் பத்திரிகை தணிக்கை முறை ஆகியன நீக்கப்பட்டன; மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்ட ராணுவ கவச வாகன அணி திருப்பி அனுப்பப்பட்டது. [உ-த-5]

## இருவர் பலி

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட, 26 பொலீஸார் காயமடைந்தனர்.

## புரட்சியாளர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

ஆனால், கினாடியனயேவ் தொடர்ந்து கிரெம்ளின் தங்கியிருப்பதாக பிந்திக் கிடைத்த ஒரு செய்தி தெரிவித்தது.

தப்பி ஓடிய புரட்சியாளர்களில் சிலர் கிரிமியா நகரில் இருக்கும் கோர்பச்சேவைச் சந்திக்கச் சென்றதாக ஒரு செய்தி தெரிவித்தது.

சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டதை அடுத்து புரட்சியாளர்களுக்கு எதிராக கிரிமினல் குற்ற விசாரணை நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில்—

கிரிமியா நகரில் விடுதலையான ஜனாதிபதி கோர்ப்பச்சேவ், சதிப்புரட்சியாளர்களை தான் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார். (உ-த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை

[இளைப்பாறிய சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்]

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை அவர்கள் 19-08-1991 அன்று காலமானார். அன்னார் பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளையின் அன்புச் சகோதரரும் ஆவார். மகேந்திரன் (பொறியியலாளர், புகையிரத இலாகா, தெமட்டகொட), தெய்வேந்திரன் [இளைப்பாறிய விமானப் படை அதிகாரி], அழகேந்திரன் [ஜேர்மனி], நகுலேந்திரன் (மேற்பார்வையாளர், சிறைச்சாலைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), யோகேந்திரன் [கட்டட முகாரி, புகையிரத இலாகா, வவுனியா], றூபேந்திரன் [நிறுவைகள், அளவைகள் பரிசோதகர், திருகோணமலை], தவேந்திரன் [தொழில் நுட்ப உத்தியோகத்தர், மருத்துவபீடம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்], அனற் விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறேஸ், யசிந்தா [ஜேர்மனி], இந்திராணி [சிறைச்சாலைத் திணைக்களம், யாழ்ப்பாணம்], றஞ்சிதராட்ணி, யோகினி, தவம் [போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], அருள் மரியதாஸ் [கடற்றொழில் பரிசோதகர், காங்கேசன்துறை] ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷாந்தி, டிலானி, கெவின், மறியோ, தர்ஷான், மேறியன், டெனூசியா [ஜேர்மனி], அலன் [ஜேர்மனி], மெலின்டா [ஜேர்மனி], தர்மேந்திரன், மோகனச்சந்திரன், சிந்துஜா, நிரோஜன், பிரியதர்சினி, தீபச்சந்திரன், ஹம்சானந், விஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [22 - 08 - 1991] வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு இல. 460, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து, சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மகேந்திரன்,
[மகன்]

460, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[4257]

## திருமதி கமலாம்பிகை நாகலிங்கம்

சரவணை மேற்கைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை நாகலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முதலியார் திரு. நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திலகவதி அம்மாள் [இளைப்பாறிய ஆசிரியை], லோகாம்பிகை [இளைப்பாறிய ஆசிரியை], காலஞ்சென்ற பத்மநாதன் [புகையிரதப்பகுதி கொழும்பு], தனபாலன் [ஆசிரியர் புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநாவுக்கரசு [இளைப்பாறிய ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்], நடராசா [நிர்வாக உத்தியோகத்தர், சுகாதாரப்பகுதி யாழ். மாநகர சபை], சியாமளா தேவி [ஜேர்மனி], சரஸ்வதி [ஆசிரியை சைவப்பிரகாச வித்தியாசாலை, வேலணை] ஆகியோரின் அன்பு மாமியாரும், பத்மினி, குகன் [லண்டன்], தயாளினி, கௌரி [பலாலி ஆசிரிய கலாசாலை], திவாகரன் [ஜேர்மனி], ஜெயகரன் [ஜேர்மனி], செந்தூரன், பிரதாயினி, சிவாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [21 - 8 - 91] தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
நா. தனபாலன்

[17666]

## திருமதி மண்டலேஸ்வரி சரவணமுத்து

திருமதி மண்டலேஸ்வரி சரவணமுத்து சிவபதம் அடைந்துவிட்டார். இவர் புலோலியை பிறப்பிடமாகவும், வட்டுவத்தை அல்வாய் வதிரியூரை வதிவிடமாகவும் கொண்ட ம. அ. சரவணமுத்துவின் அன்பு மனைவியும் A. S. பூவேந்திரன் [குடும்பத்திட்ட பணிப்பாளர்] சறோஜினிதேவி அவர்களின் அன்புத்தாயாரும், திருமதி தவமணி பூவேந்திரன், K. M. சுப்பிரமணியம் [Charted Engineer] அவர்களின் அன்பு மாமியாரும், திருவாளர்கள் இராதாகிருஸ்ணன் [U. S. A.] இரவீந்திரன் [U. S. A.] இராம்குமார், இராதாமோகன், சிவா தவேந்திரன், கௌரி, திருமதி அனுசூயா நாககோபன், திருமதி றேணுகா நாகேஸ்வரன் (Australia) அவர்களின் அன்புப் பேத்தியும், ஆனந், நரேன் அவர்களின் பிரியபாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல், சைவக்கிரியைகள் வீட்டில் நடைபெற்ற பின் நேற்று 21 - 8 - 91 தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
ம. அ. சரவணமுத்து

"குகவாசா"
இரும்பு மதவடி,
உடுப்பிட்டி றோட்,
வதிரி, கரவெட்டி.

[17665]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பூஸா முகாமில் மோதல்!

கொழும்பு, ஆக. 22

தடுப்புக்காவல் கைதிகளிடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்து பூஸா தடுப்பு முகாமின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜே. வி. பியின் இரு பிரிவுகளுக்கு இடையே அண்மையில் ஏற்பட்ட மோதலை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அம்மோதலில் ஓர் இராணுவ அதிகாரியும் ஐந்து தீவிரவாதிகளும் பலத்த காயமடைந்தனர்.

பூஸா முகாமில் தற்போது சுமார் ஆயிரத்து 800 ஜே. வி. பியினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

## கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ்- மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராம சேவையாளர் பதவிகளுக்கு யாழ். செயலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முடிவுத் திகதி அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆகும். [இ-3]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 22

கடந்த 7 ஆம் திகதி ஆனையிறவில் நடைபெற்ற மோதலில் காயம் அடைந்த விடுதலைப் புலிகள் போராளியான டிலக்ஸ் (தி. ராஜேந்திரன்—உருத்திரபுரம்) கடந்த 20 ஆம் திகதி வீரமரணம் அடைந்தார். (இ)

## இன்றைய கூட்டத்தில் விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஆக. 22

கப்பலில் வந்து சேரும் உணவுப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்வது குறித்து இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்பட இருக்கிறது.

ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் இப்பொருள்கள் விற்பனை செய்யப்பட இருப்பது தெரிந்ததே.

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு ப. நோ. கூ. சங்கத்தலைவர்களும், பொது முகாமையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## விடுதலை

புதுடில்லி, ஆக. 22

காஷ்மீர் தீவிரவாதிகளினால் கடந்த ஜூன் 28 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட இந்திய எண்ணெய் கூட்டுத்தாபன அதிகாரி துரைசாமி புதன்கிழமை இரவு விடுவிக்கப்பட்டார்.

காவலில் இருந்த காஷ்மீர் தீவிரவாதிகளில் முக்கியமான ஐந்து பேரை துரைசாமிக்குப் பதிலாக காஷ்மீர் மாநில அரசு விடுவித்தது.

(இ-எ)

## வருடாந்த மஹோற்சவம்

குருநகர், ஆக. 22

அளவெட்டி தெற்கு ஸ்ரீநாக வரதநாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-10 மணிக்கு நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

இரதோற்சவம் செப்டம்பர் முதலாம் திகதி ஞாயிறு முற்பகல் 8-00 மணிக்கும், தீர்த்தோற்சவம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கும் நடைபெறும். [இ-51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தையில் பேரணி

யாழ்ப்பாணம், ஆக. 22

தமிழ் மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கையைக் கண்டிக்கும் வகையில் வவுனியா மாவட்டத்தில் நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம் பெற்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் அரச எதிர்ப்புச் சுலோகங்களுடன் அதில் கலந்து கொண்டனர்.

இறப்பைக்குளத்திலிருந்து ஆரம்பமாகிய ஒரு பேரணி ஓமந்தைப் பாடசாலையில் முடிவடைந்தது.

பூவரசங்குளத்திலிருந்து பிற்பகலில் ஆரம்பமான மற்றொரு பேரணி குஞ்சுக்குளம் பகுதிவரை சென்று முடிவடைந்தது. (உ-5)

## நாடாளுமன்ற தெரிவுக் குழு தலைவராக முனசிங்க

கொழும்பு, ஆக. 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக சுதந்திரக் கட்சி எம். பி. திரு. மங்கள முனசிங்க நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு. பிரேமதாசவின் அறிவுறுத்தலின் பேரிலேயே திரு. மங்கள முனசிங்கவைத் தலைவராக நியமிப்பது என தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

A/L 92 புதிய பிரிவுகள்

சனி - ஞாயிறு வகுப்புகள்

தாவரவியல்: திரு. ஐங்கரநேசன்
விலங்கியல்: திரு. நாகநாதன்
இரசாயனவியல்: திரு. செல்வா
பௌதீகவியல்: திரு. வர்ணம்
தூய/பிரயோக கணிதம்: திரு. சந்திரமோகன

| நேரம் | பாடம் | அலகு |
|---|---|---|
| காலை | | |
| 6—7 | தாவரவியல் | உடற்றொழிலியல் |
| 7—8 | தாவரவியல் | புதிய உடல் அமைப்பும், இனப்பெருக்கமும் |
| பிற்பகல் | | |
| 2-30—3-30 | பௌதீகவியல் | மின்னியல் |
| 3-30—4-30 | இரசாயனவியல் | அசேதன இரசாயனம் |
| 4-30—5-30 | தாவரவியல் | உடலமைப்பியல் |
| | பிரயோககணிதம் | |
| 5-30—6-30 | விலங்கியல் | முளையவியல் |
| | தூயகணிதம் | |

★ குறித்த எண்ணிக்கையானவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுமாதலால் 23 - 08 - 1991இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆரம்பம்: 25-08-1991

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-0376)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி நல்லையா

உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி நல்லையா 18 - 08 - 1991 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமதி பராசக்தி சிற்றம்பலம், வெற்றிவேலு, சண்முகம், முத்தையா, காலஞ்சென்ற ஐயாத்துரை, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதி அடக்கம் 19-08-1991 மாலை கைதடி மயானத்தில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புஸ்பராசா.

(17871)

## திருமதி மேரிமாகிறேற் மரியநாயகம்

சில்லாலையைச் சேர்ந்த திருமதி மேரிமாகிறேற் மரியநாயகம் 21-8-91 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் T. S. மரியநாயகம் [பொறுப்பதிகாரி, வலி. தென் மேற்கு பிரதேச சபை, பண்டத்தரிப்பு பட்டணம்] அவர்களின் அன்பு மனைவியும், மேரி எதெல் புஸ்பநாயகி, மேரி எட்வேட் செல்வநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22-8-91 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, சில்லாலை கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. S. மரியநாயகம்

புனித அந்தோனியார் வீதி,
சில்லாலை.

(17873)